முக்கிய வார்த்தைகள்:
*நன்னடத்தை / குணம்*
*இறைத்தூதுவத்துவ வழிகாட்டுதல்*
*அணுகுமுறை*
*உலகம்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**21 ஆகஸ்ட் 2026 / 08 ரபீவுல் அவ்வல் ஹிஜிரி 1448**

# <u>இறைத்தூதுவத்துவ வழிகாட்டுதல்: முன்மாதிரியான குணநலன்களுடன் வாழ்வது</u>

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَىٰ فِي ٱلتَّنْزِيلِ: يَا أَيُّهَا ٱلَّذِينَ آمَنُوا ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்குக் கீழ்படிந்து நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது தக்வா [பக்தியைப்] பலப்படுத்திக் கொள்வோமாக! இந்த "தக்வா" மறுமையின் வேதனையிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் கேடயமாகவும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுத் தரும் உன்னதமானக் குணத்தை வளர்ப்பதற்கு உந்து சக்தியாகவும் அமையட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

ரபீவுல் அவ்வல் மாதத்தின் வருகையானது, நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் மீதான நமது ஏக்கத்தையும் அன்பையும் புதுப்பித்து, நமது இதயங்களை மீண்டும் ஒருமுறை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் நமக்குக் காட்டியுள்ள வழிகாட்டுதலையும், அவர்களின் வாழ்க்கை நெறியான *"ஹத்யுன் நபவி"* யையும் பின்பற்றுவதற்கான நமது உறுதிப்பாட்டைப் புதுப்பித்துக் கொள்வதற்கு, இறைத்தூதர்[ஸல்] அவர்களின் பிறப்பை நினைவு கூறும் இத்தருணம் ஒரு பொருத்தமான நேரமாகும். திருக்குர்ஆனின் "அல்-அஹ்ஸாப்" எனும் அத்தியாயத்தின் 21-வது வசனத்தில் இக்கருத்து தான் கூறப்பட்டுள்ளது; அவ்வசனத்தில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, இறைத்தூதர்[ஸல்] அவர்களின் வாழ்க்கை முறையில் சிந்தித்துப் பார்க்க வேண்டுமெனவும், நமது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அதனை நமக்கு முன்மாதிரியாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்றும் நமக்கு அழைப்பு விடுக்கின்றான். அல்லாஹ் கூறுகிறான்:

لَّقَدْ كَانَ لَكُمْ فِى رَسُولِ ٱللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَن كَانَ يَرْجُوا۟ ٱللَّهَ وَٱلْيَوْمَ ٱلْءَاخِرَ وَذَكَرَ ٱللَّهَ كَثِيرًا ﴿٢١﴾

பொருள்: *"அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது"*

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

இன்று நாம் வாழும் முறையானது, அதிக முன்னேற்றமானதாகவும் வேகமானதாகவும் உள்ளது. சில சமயங்களில், மார்க்கப் போதனைகளில் வேரூன்றிய நமது ஆன்மீக விழுமியங்களைப் பாதுகாப்பதா? அல்லது இவ்வுலகின் முன்னேற்றத்தையும் வெற்றியையும் தேடுவதா? என்பதில் ஏதாவதொன்றை நாம் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற எண்ணத்தை அது

நமக்கு ஏற்படுத்துகிறது. சிலர், மார்க்க சம்பந்தமான விழுமியங்களையும் வழிகாட்டுதலையும் உறுதியாகப் பற்றிக் கொள்ளாமலேயே உண்மையான உலகியல் வெற்றியை அடைய முடியும் எனவும் நினைக்கக் கூடும்.

ஆயினும், ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் வாழ்க்கையானது, நமக்கு இதற்கு மாற்றமான சிந்தனையை வழங்குகிறது. மார்க்க விழுமியங்கள் மற்றும் மதிப்பீடுகளும் உலக வாழ்க்கையும் ஒன்றோடொன்று முரண்பட்டவையல்ல என்பதை இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். மேலும், அவை ஒன்றுக்கொன்று துணைபுரிந்து, ஒன்றை மற்றொன்று பலப்படுத்தக் கூடியவையாகும் எனவும் வழிகாட்டியுள்ளார்கள்.

*"ஹத்யுன் நபவி"* அதாவது, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் முன்மாதிரியாகக் காட்டியுள்ள அணுகுமுறையானது, நமது மார்க்கக் கொள்கைகளில் எதையும் நாம் விட்டுக் கொடுக்காமல், நமது காலத்தின் சவால்களை எதிர்கொள்வதற்கான சகிப்புத்தன்மையையும் ஆற்றலையும் தன்னம்பிக்கை யையும் நமக்கு அளிக்கிறது.

மக்காவில் முஸ்லிம்கள் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினராக இருந்த போதிலும், அவர்கள் அல்லாஹ்வின் ஏகத்துவக் கொள்கையின் மீதான தங்கள் நம்பிக்கையில் விடாப் பிடியுடனும் சகிப்புத் தன்மையுடனும் உறுதியுடனும் இருந்தார்கள். ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் மதீனா நகரத்துக்கு ஹிஜ்ரத் எனும் தியாகப் பயணம் செய்த பிறகு, பன்முகத்தன்மை கொண்ட ஒரு சமுதாயத்திற்குள் முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்கி, வளர்த்து அதன் மக்களிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்தினார்கள்.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் உன்னதமான குணத்தைத் தொடர்ந்து வெளிப்படுத்தியதோடு, பல்வேறு பின்னணிகளையும் குணாதிசயங் களையும் கொண்ட மக்களுடன் மிகச் சிறப்பான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டும் பழகினார்கள். அவர்களின்[ஸல்] தலைமை நடைமுறைக்கு உகந்ததாக இருந்தது. அவர்கள் அனைவரிடமும் வெளிப்படையாகவும் யதார்த்தவாதியாகவும் பழகினார்கள். அனைவருக்கும் நன்மைகளை

ஏற்படுத்தும் செயல்களை முன்னெடுத்துச் செய்வதில் முனைப்புடன் காணப்பட்டார்கள். அவர்களின் மிகச் சிறந்த குணநலன் தான், அவர்களது தலைமைத்துவத்தின் மையமாக இருந்தது. அச்சீரிய குணநலன், அவர்களைச் சுற்றியிருந்தவர்களின் மரியாதையையும் அன்பையும் அவர்களுக்குப் பெற்றுத் தந்தது.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

*ஹத்யுன் நபவியை* [அதாவது, இறைத்தூதுவத்துவ வழிகாட்டுதலை], நாம் நமது சொந்த வாழ்க்கையில் எவ்வாறு செயல்படுத்துவது? என ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்: இதற்கான பதில், ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் எல்லா நேரங்களிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் வெளிப்படுத்திய உன்னதமான குணத்தைப் புரிந்து கொண்டு, அதை நமது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் என்பதாகும்.

நாம் பணி செய்யும் இடம், கல்விக்கூடம், நமது வீடு, சமூகம் அல்லது இணையதளம் ஆகிய அனைத்திலும் நமது அன்றாடத் தொடர்புகள் இறைத்தூதுவத்துவ குணத்தால் வழி நடத்தப்பட வேண்டும். நீதியுடன் நடந்து கொள்வது, பிறருக்குத் தீங்கு விளைவிக்காமல் இருப்பது, நமது செயல்களில் வரம்பு மீறுவதைத் தவிர்ப்பது, நாம் பேசுவதில் கவனமாக இருப்பது ஆகிய அனைத்தும் இறைத்தூதுவத்துவப் பண்புகளாகும். இன்றைய வாழ்க்கையை, அமைதி, சமநிலை மற்றும் வெற்றியுடன் வழிநடத்துவதற்கு இவை அவசியமாகும்.

*"நிச்சயமாக, நான் உங்களில் மிகவும் நேசிப்பவர்களும், நியாயத் தீர்ப்பு நாளில் எனக்கு மிகவும் நெருக்கமானவர்களாக இருப்பவர்களும் யாரென்றால், சிறந்த குணநலன்களைக் கொண்டவர்களே ஆவர்"* என இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்]

எனவே, ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் மீது நாம் கொண்டுள்ள உண்மையான அன்பின் வெளிப்பாடாக, நமது குணநலன்கள் எந்த அளவிற்கு அவர்களின்[ஸல்] உன்னதக் குணநலன்களைப் பிரதிபலிக்கின்றன? என நம்மை நாம் கேட்டுக் கொள்வோமாக!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, எல்லா மக்களுக்கும் நன்மை புரியவும், மறுமையில் சொர்க்கத்தில் அவர்களுடன் ஒன்று சேர்க்கப்படவும் தேவையான வழிகாட்டுதலையும் ஆற்றலையும் நமக்கு வழங்கி, அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوْهُ إِنَّهُ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ

عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.